ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

**தொடர்பூட்டல் திணைக்களம்**
30, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை.
தொலைபேசி: 2477424, 2477423, 2477311
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk

# பத்திரிகை வெளியீடு

| | |
|---|---|
| **வெளியிடுபவர்** | புள்ளிவிபரத் திணைக்களம் |
| **திகதி** | 2018 திசெம்பர் 14 |

## இலங்கை கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்(கொ.மு.சு) – 2018 நவம்பர்

### தயாரிப்பு நடவடிக்கைகள் நவம்பரில் மெதுவடைந்தது

**கொ.மு.சு**
சுட்டெண் பெறுமதி
**54.3**
ஒத்தோபர் 2018 உடன் ஒப்பிடுகையில் 3.9 சுட்டெண் புள்ளிகள் குறைவு

நவம்பரில் தயாரிப்பு நடவடிக்கைகளில் அவதானிக்கப்பட்ட மெதுவடைதலானது விசேடமாக புடவைகள், அணியும் ஆடைகள், தோல் மற்றும் அதனுடன் சார்ந்த உற்பத்தி பொருட்களின் தயாரிப்பு நடவடிக்கைகளின் புதிய கட்டளைகள் மற்றும் உற்பத்தியில் ஏற்பட்ட மெதுவடைதலினால் பிரதானமாக உந்தப்பட்டது. எவ்வாறாகினும், உணவு மற்றும் குடிபான தயாரிப்பு நடவடிக்கைகளின் புதிய கட்டளைகள் மற்றும் உற்பத்தியானது நத்தார் பருவகால கேள்வியுடன் மேம்பாடொன்றினை காண்பித்தன. தொழில்நிலையானது இக்காலப்பகுதியில் மாற்றமடையாது காணப்பட்டதுடன், இதற்கு விசேடமாக தளபாடங்கள் தயாரிப்பு நடவடிக்கைகளில் மேலதிகமாக தொழிலாளர்களை சேர்ப்பதில் காணப்பட்ட இடையூறுகள் காரணமாக அமைந்தன.

**கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் தயாரிப்பு**




| மாறி | ஒத். | நவம்பர் | +/- | சாராம்சம் |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு** | **58.2** | **54.3** | **-** | **அதிகரிப்பு, மெதுவான வீதத்தில்** |
| | | **கொ.மு.சு துணைச்சுட்டெண்கள்** | | |
| புதிய கட்டளைகள் | 59.0 | 54.0 | - | அதிகரிப்பு, மெதுவான வீதத்தில் |
| உற்பத்தி | 61.0 | 54.0 | - | அதிகரிப்பு, மெதுவான வீதத்தில் |
| தொழில்நிலை | 55.0 | 55.0 | = | அதிகரிப்பு, சமமான வீதத்தில் |
| கொள்வனவுகளின் இருப்பு | 61.0 | 57.5 | - | அதிகரிப்பு, மெதுவான வீதத்தில் |
| நிரம்பலர் வழங்கல் நேரம் | 54.0 | 52.5 | - | நீட்சி, மெதுவான வீதத்தில் |

இவ்வேளையில், ஒட்டுமொத்த கொள்வனவுகளின் இருப்புகள் ஒரு மெதுவடைதலினை காண்பித்திருந்ததுடன், இதற்கு பிரதானமாக புடவைகள், அணியும் ஆடைகள், தோல் மற்றும் அதனுடன் சார்ந்த உற்பத்தி பொருட்களில் காணப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட உற்பத்திகள் காரணமாக அமைந்தன. நிரம்பலர் வழங்கல் நேரமானது ஒரு மெதுவான வீதத்தில் நீட்சியடைந்திருந்ததுடன், இதற்கு பிரதானமாக உணவு மற்றும் குடிபான தயாரிப்பு நடவடிக்கைகளில் கேள்வி மீதான அவர்களுடைய உற்பத்தியின் வேகத்தினை அதிகரிப்பதற்காக வழங்கலின் கிடைப்பனவு நேரத்தினை குறைவடைத்திருந்தமையினால் உந்தப்பட்டது.

தயாரிப்பு துறை கொ.மு.சுணின் அனைத்து துணைச்சுட்டெண்களும் நடுநிலையான 50.0 இற்கு மேலான பெறுமதியை பதிவு செய்து ஒத்தோபருடன் ஒப்பிடுகையில் நவம்பரில் ஒரு மெதுவான வீதத்தில் விரிவடைந்தமையினை சுட்டிக்காட்டியது.

***உலக தோற்றப்பாடு: தயாரிப்பு கொ.மு.சு***

உலக தயாரிப்பு கொ.மு.சு நவம்பரில் 52.0 பெறுமதியினை பதிவு செய்து ஒத்தோபருடன் ஒப்பிடுகையில் மாற்றமடையாது காணப்பட்டது.

ஐரோப்பிய வலயம் மற்றும் ஐக்கிய அமெரிக்கா என்பவற்றின் தயாரிப்பு கொ.மு.சு நவம்பர் 2018இல் மெதுவடைந்திருந்துடன் சீனா, இந்தியா, ரஷ்யா மற்றும் ஐக்கிய இராச்சியம் என்பன அதிகரித்திருந்தது.

*(மூலம்: மார்க்கிட், திசெம்பர் 12, 2018 இல் உள்ளபடியான)*

*1 மார்க்கிட் நிறுவனமானது நிதியியல் தரவுப் பணிகள் தொடர்பான முன்னிலையான உலக பன்முகத்தன்மை வாய்ந்த வழங்குனராகும். இது உலக கொ.மு.சு தொகுப்பாளராக அடையாளங்காணப்படுவதுடன் ஐரோப்பிய வலயம் போன்ற முக்கிய பிரதேசங்கள் உள்ளடங்கலாக 30க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு கொ.மு.சு இனை தொகுக்கின்றது.*

## பணிகள் துறை வளர்ச்சி மெதுவடைந்தது

பணிகள் துறையானது நவம்பர் 2018இல் ஒரு மெதுவான வீதத்தில் விரிவடைந்ததுடன், மே 2015இல் அளவீடு ஆரம்பிக்கப்பட்டதிலிருந்தான தாழ்வான சுட்டெண் பெறுமதியினை பதிவு செய்தது.

பணிகள் துறையில் ஏற்பட்ட மெதுவடைதலுக்கு பிரதானமாக நடவடிக்கைகளுக்கான எதிர்பார்ப்புகளில் பதிவாகிய குறைந்தளவிலான சுட்டெண் பெறுமதியே பிரதான காரணமாயிருந்தது. மேலும், புதிய வியாபாரங்கள் மற்றும் தொழில்நிலையிலும் ஒரு குறிப்பிடத்தக்களவிலான மெதுவடைதல் அவதானிக்கப்பட்டது. தற்போது நாட்டில் நிலவும் அரசியல் நிலைமைகளும் எதிர்கால கொள்கைகள் மீதான நிச்சயமற்ற தன்மையும் பதிலிறுப்பாளர்களின் நடவடிக்கைகளுக்கான எதிர்பார்ப்பிலும் புதிய வியாபாரங்களிலான வளர்ச்சியிலும் தாக்கம் செலுத்தியிருந்தது. எவ்வாறாகினும், சாதகமான பக்கத்தில் மொத்தவிற்பனை மற்றும் சில்லறை வர்த்தகம் மற்றும் தங்குமிடம், உணவு மற்றும் குடிபான துணைத்துறைகளில் வரவிருக்கின்ற பண்டிகை பருவகாலம் மற்றும் சுற்றுலாத்துறையின் உச்ச பருவகாலம் என்பவற்றின் காரணமாக ஒரு வளர்ச்சியினை பதிவு செய்தன.

| மாறி | ஒத். | நவம்பர் | +/- | சாராம்சம் |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு** | **55.5** | **52.6** | **-** | **அதிகரிப்பு, மெதுவான வீதத்தில்** |
| <u>கொ.மு.சு துணைச்சுட்டெண்கள்</u> | | | | |
| புதிய வியாபாரங்கள் | 58.2 | 53.4 | - | அதிகரிப்பு, மெதுவான வீதத்தில் |
| வியாபார நடவடிக்கைகள் | 57.1 | 57.4 | + | அதிகரிப்பு, உயர்வான வீதத்தில் |
| தொழில்நிலை | 55.4 | 52.3 | - | அதிகரிப்பு, மெதுவான வீதத்தில் |
| நிலுவையிலுள்ள பணிகள் | 43.1 | 44.6 | - | வீழ்ச்சி, மெதுவான வீதத்தில் |
| நடவடிக்கைகளுக்கான எதிர்பார்ப்பு | 63.6 | 55.1 | - | சாதகம், மெதுவான வீதத்தில் |

பணிகள் துறையில் விதிக்கப்பட்ட விலைகள் நலிவடைந்த உள்நாட்டு நாணயம் காரணமாக அதிகரித்திருந்தது. எவ்வாறாகினும், அண்மைக்கால எரிபொருள் விலைகளிலான குறைவு காரணமாக அவர்களுடைய வெளியீட்டு விலைகள் எதிர்பார்க்கப்பட்ட அதிகரிப்பினை விட குறைவாக அதிகரித்திருந்தன. பணிகள் துறையில் எதிர்பார்க்கப்பட்ட தொழிலாளர் செலவினமும் ஊக்குவிப்பு கொடுப்பனவுகள் மற்றும் அதிகரிப்புகள் காரணமாக நவம்பரில் அதிகரித்திருந்தது.

**கொ.மு.சு**
**சுட்டெண் பெறுமதி**
**52.6**

**ஒத்தோபர் 2018 உடன் ஒப்பிடுகையில் 2.9 சுட்டெண் புள்ளிகள் குறைவு**

**கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் பணிகள்**




### *உலக தோற்றப்பாடு: பணிகள் கொ.மு.சு*

உலக பணிகள் கொ.மு.சு ஒத்தோபரின் 53.4 இலிருந்து உயர்வடைந்து நான்கு மாதகாலப்பகுதியில் உயர்வான 53.7 இற்கு அதிகரித்திருந்ததுடன் தற்போது 112 தொடர்ச்சியான மாதங்களுக்கான வளர்ச்சியினையும் சமிஞ்சை செய்தது. அளவீட்டினால் உள்ளடக்கப்படுகின்ற அனைத்து நாடுகளும் நவம்பரில் வியாபார நடவடிக்கைகள் அதிகரித்திருந்தமையினை காண்பித்தன.

ஜப்பான், சீனா, இந்தியா, ஐக்கிய இராச்சியம் மற்றும் ஐக்கிய அமெரிக்கா என்பனவற்றின் பணிகள் கொ.மு.சு ஒத்தோபர் உடன் ஒப்பிடுகையில் நவம்பரில் அவர்களுடைய பணிகள் துறையானது மேம்பாடு அடைந்தமையினை சுட்டிக்காட்டுகின்றன.

*(மூலம்: மார்க்கிட், திசெம்பர் 13, 2018 இல் உள்ளபடியான)*

**தொழில்நுட்பக் குறிப்பு:**

**சுட்டெண்**

கொ.மு.சுட்டெண்ணானது "வியாபித்தல் சுட்டெண்ணாக" கணிக்கப்படுகிறது. இங்கு இது 0 மற்றும் 100 இற்குமிடையிலான பெறுமதியினைக் கொண்டிருக்குமிடத்து.

கொ.மு.சு $=50$ மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது நடுநிலையில் காணப்படுகிறது.

கொ.மு.சு $>50$ மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக விரிவடைகிறது.

கொ.மு.சு $<50$ மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக வீழ்ச்சியடைகிறது.

**மாதிரி**

மாதிரிக் கட்டமைப்பானது ஊ.சே.நிதியத் திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட மேல் மாகாணத்தில் அமைந்துள்ள பாரிய கம்பனிகளின் பட்டியலை அடிப்படையாகக் கொண்டுள்ளது. தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகளுக்கான மாதிரிகள் ஒவ்வொன்றிற்குமான குறைந்தபட்சம் 100 பதிலிறுப்புக்களைக் கொண்ட இலக்குகளுடன் மொ.உ.உற்பத்திகளின் துறைவாரியான பங்குகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டன.

**மாறிகளின் வரைவிலக்கணங்கள்:**

| | |
|---|---|
| தொழில்நிலை | : நிறுவனத்தில் பணியாற்றும் அலுவலர்களின் எண்ணிக்கை |
| கொள்வனவுகளின் இருப்பு | : உற்பத்திக்குப் பயன்படுத்துவதற்காக கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியசாலையில் வைக்கப்பட்டுள்ள மூலப்பொருட்கள் |
| நிரம்பலர் வழங்கல் நேரம் | : கட்டளை வழங்கப்பட்டமைக்கும் நிரம்பலர்களினால் பொருட்கள் வழங்கப்பட்டமைக்குமிடையிலான நேர வேறுபாடு |
| நிலுவையிலுள்ள பணிகள் | : வியாபார நடவடிக்கையின் அதிகரித்த பாய்ச்சலின் காரணமாக பூர்த்தி செய்யப்படாத கட்டளைகள் |

மற்றைய மாறிகள் சுயமான விளக்கத்தினைக் கொண்டுள்ளன.